## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
## தேனாம்பேட்டை, சென்னை – 18.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 06/2020–21/ நாள். 12.01.2021

விழுக்காடு மொத்த ஒப்பந்த முறை – 19 பணிகள்

---

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் இணைப்பில் உள்ளவாறு பணியின் எதிரில் குறிப்பிட்ட நாளில் ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தப்பட்ட தாட்கோ செயற்பொறியாளர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

தாட்கோ, தலைமை அலுவலகம் மூலம் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் சென்னையில் உள்ள தாட்கோ தலைமையகத்தில் குறிப்பிட்ட தேதியில் ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் தலைமை அலுவலகம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் முன்னிலையில் முற்பகல் 11.00 மணி அளவில் திறக்கப்படும்.

01. அரசாணை எண் 81/ ஆதி (ம) பகுநலத்துறை/ நாள் 10.09.2011 இன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவற்றில் மற்றும் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டடப் பணியில் அனுபவமுள்ள முதல் அழைப்பாக இருந்தால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். இரண்டாம் மற்றும் அதற்குமேற்பட்ட அழைப்புகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்களுடன் ஏனைய ஒப்பந்ததாரர்களும் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் நடப்பாண்டு 2020 – 2021 நிலையில் ஒப்பந்தப் பதிவு பெறாத ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முடியாது.

02. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட கோட்ட செயற் பொறியளர்களிடமிருந்து பணிகளின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்டுள்ள தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒப்பந்ததாரர் பொறுப்பாகும். குறிப்பிட்டுள்ள தேதிக்குபின் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி வரும் விண்ணப்பம் செயற்பொறியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

03. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தபாலில் அனுப்பப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற நிர்ணயிக்கப்பட்ட விற்பனைக்கும் மற்றும் பெற்றுக் கொள்ள கடைசி நாள் ஏதாவது ஒரு காரணத்தால் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி படிவம் அதற்கு அடுத்த பணி நாளில் விற்பனை செய்து மறுநாள் மாலை 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். பூர்த்தி செய்யப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பதிவு அஞ்சல் மூலமாகவும் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

04. பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். காலதாமதத்திற்கு தாட்கோ பொறுப்பேற்காது. குறிப்பிட்ட கால வரையறைக்குள் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கப்படாமல் முகவருக்கே திருப்பி அனுப்பப்படும்.

05. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ஒவ்வொரு பணிக்கும் ரூபாய்) இணைப்பில் உள்ளவாறு ரொக்கமாக, ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் ஆவணங்களை சரிபார்த்து ஒப்புதல் அளித்த பின்னரே, ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான கட்டணம் சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணம் எந்த காரணத்திற்காகவும் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது.

06. பெறப்பட்ட எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் அல்லது குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியையும் எவ்வித காரணமும் கூறாமல் இரத்து செய்ய பொது மேலாளர் (தொ.நு.) அவர்களுக்கு முழு அதிகாரம்உண்டு.

07. டேவணித் தொகை (முன் வைப்புத் தொகை) ரூபாய் இணைப்பில்' உள்ளபடி அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்டு, குறிப்பிட்டுள்ள சம்மந்தப்பட்ட தாட்கோ செயற் பொறியாளர்கள் மாற்றத் தக்க வகையில் கேட்பு வரைவோலை அல்லது தேசிய சேமிப்புப் பத்திரமாகவோ, அல்லது டெபாசிட்டாகவோ இருத்தல் வேண்டும். டெபாசிட்டாக இருப்பின் (Revenue stamps) முத்திரை வில்லையில் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும் இத்தொகை தொடர்புடைய செயற் பொறியாளர், தாட்கோ அவர்கள் எடுக்கத் தக்க வகையில் செலுத்தவேண்டும். டேவணித் தொகை குறைவாக செலுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். டேவணித் தொகை ரொக்கமாக செலுத்துதல் ஏற்கப்படமாட்டாது. வங்கி கேரண்டி எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. டேவணித் தொகை இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படுவதுடன், ஒப்பந்ததாரரின் மீது ஒப்பந்த விதிகளின்படி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

08. (I). ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை (Departmental Value) விட 5% முதல் 15% விழுக்காடு வரை குறைவாக குறிப்பிட்டிருப்பின், கூடுதல் காப்பீட்டுத் தொகையாக 2% சதவீதத்தை ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள தொகைக்கு (Department Value Including GST) ஏற்றுவாறு கூடுதலாக கேட்பு வரை வோலையாக மட்டும் ஒப்பந்ததாரரால் இணைக்கப்பட வேண்டும். **இல்லையெனில் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படாமல் முற்றிலுமாக நிராகரிக்கப்படும்.**

(II) ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை (Departmental Value) விட 15% விழுக்காட்டிற்கு மேல் குறைவாக குறிப்பிட்டிருப்பின், கூடுதல் காப்பீட்டுத் தொகையாக 50% x (Department Value including GST – Quoted Value of tenderer including GST) கணக்கிட்டு கூடுதலாக கேட்பு வரை வோலையாக மட்டும் இணைக்கப்பட்ட வேண்டும். **இல்லையெனில் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படாமல் முற்றிலுமாக நிராகரிக்கப்படும்.**

9. ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட பணிகளில் பங்கேற்கும் எந்த நபர்/ நபர்கள் தகுதியின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்கிறார்களோ அதே நபர்/ நபர்கள் கடந்த ஐந்தாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட தொகைக்கு (பணியின் மதிப்பு + GST வரி உட்பட) ஒத்த தன்மையிலான கட்டடப் பணியினை அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களின் உடன் படிக்கையின் கீழ் தனியாக ஒரு பணியினை நல்ல முறையில் செய்து முடித்திருத்தல் வேண்டும். இது தொடர்பான சான்றிதழ்கள்/ ஆவணங்கள் சம்மந்தப்பட்ட உரிய அலுவலர்களிடம் பெறப்பட்டு இணைத்திருக்க வேண்டும். **தவறும்பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படாது.**

| இலக்கம் எண் | தொகை (ரூ.இலட்சம் ) |
|---|---|
| 1 | 60.46 |
| 2 | 56.02 |
| 4 | 48.32 |
| 13 | 72.80 |
| 14 | 74.95 |
| 15 | 99.54 |
| 16 | 35.36 |
| 19 | 60.36 |

10) ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட பணிகளில் பங்கேற்கும் எந்த நபர்/ நபர்கள் தகுதியின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்கிறார்களோ அதே நபர்/ நபர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் வருடாந்திர நிதி பரிவர்த்தனை (Annual Financial Turnover) கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட தொகைக்கு (பணியின் மதிப்பு + GST வரி உட்பட) குறையாமல் அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களில் பணிகள் மேற்கொண்டவராக விண்ணப்பதாரர்/நிறுவனம் இருத்தல் வேண்டும். இது தொடர்பான சான்றிதழ்கள்/ ஆவணங்கள் சம்மந்தப்பட்ட உரிய அலுவலர்களிடம் பெறப்பட்டு இணைத்திருக்க வேண்டும். **தவறும்பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படாது.**

| இலக்கம் எண் | தொகை (ரூ.இலட்சம் ) |
|---|---|
| 1 | 181.38 |
| 2 | 168.05 |
| 4 | 144.96 |
| 13 | 218.40 |
| 14 | 224.85 |
| 15 | 298.62 |
| 16 | 106.08 |
| 19 | 181.08 |

11. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரும்போது முந்தைய செயல்முறை, செய்து முடித்திருக்கும் வேலையின் தன்மை மற்றும் மதிப்புத் தொகை, ஒப்பந்தத்தாரர் பதிவு சான்றிதழ் மற்றும் நடப்பாண்டு பதிவு புதுப்பித்ததற்கான சான்று, மின்பணி செய்வதற்கான ‘பி‘ அல்லது ‘சி‘ உரிமம் பெற்ற நபரின் சான்றிதழ் , சரக்கு மற்றும் சேவைவரி சான்று ஆகியவற்றை விண்ணபத்துடன் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி சான்றிதழ்களை சரி பார்த்த பிறகே ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற் பொறியாளர் அவர்களால் வழங்கப்படும். அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பம் பெறப்படாத பதிவுகளுடன் வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் (Downloaded from internet) செய்து சமர்ப்பிக்கும்போது மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

12. இவ்வொப்பந்தப்புள்ளி அழைப்பில் கோரப்படும் பணிகள் அனைத்தும் ஒப்பந்தகாலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். தற்போது செய்து வரும் பணிகள் ஏதேனும் இருப்பின் வேலையின் பெயர், ஒப்பந்த தொகை, முடிவுற்ற வேலையின் மதிப்பு ஆகியவற்றினை தவறாது இணைக்க வேண்டும்.

13. ஒப்பந்தப்புள்ளியின் மூடுறையில் (கவரில்) வேலையின் பெயர், டேவணித்தொகை, ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றினை தவறாது குறிப்பிட வேண்டும். அவ்வாறில்லாது பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் நிராகரிக்கப்படும். மேலும் மூடி முத்திரையிடப்படாத ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

14. ஒப்பந்ததாரர் செய்யும் பணியின் மதிப்பீட்டுத் தொகைக்கு ஏற்றவாறு தொழில் நுட்ப அலுவலர்களை நியமனம் செய்து அவர்களின் பெயர், கல்வி தகுதிக்காண் சான்றிதழ்கள் மற்றும் பணியை மேற்பார்வையிடுவதற்கான ஒப்புதல் கடிதம் ஆகியவற்றுடன் மேற்கண்ட விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

15. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை முழுமையாக படித்து பூர்த்தி செய்து, ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் நிராகரிக்கப்படும்.

16. ஒப்பந்தப்புள்ளியுடன் இது வரை செய்த பணிகளின் விவரங்கள் பணி தொடங்கிய நாள் பணி முடிவடைந்த நாள் ஆகியவற்றினை பட்டியலிட்டும் மேலும் தற்போது ஏதேனும் பணி செய்யப்படுமாயின் அப்பணியின் பெயர், பணி தொடங்கிய நாள், பணி முடிவடைய வேண்டிய நாள், தற்போதைய நிலை ஆகியனவற்றை பட்டியலிட்டும் இணைக்கப்பட வேண்டும்.

17. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு முன் கட்டுமானத்திற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்கள் கிடைக்குமிடம் மற்றும் தேவையான அளவு ஆகியவற்றினை உறுதி செய்து கொண்டு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.

18. ஏற்கனவே பணி ஒப்பந்தம் இரத்து ஆனவர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் ஏற்றுக் கொள்ளப்படாது.

19. ஒப்பந்தப்புள்ளி தேதி நிலையில் ஒப்பந்ததாரர் பதிவு நிலையில் இல்லாதது, பணித்திறன் குறைவாக அல்லது திருப்திகரமாக இல்லாதது, நிதித்திறன் குறைவானவரது ஒப்பந்தப்புள்ளிகளும் பரிசீலிக்கப்படாது.

**20. ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கும் ஒரு ஒப்பந்ததாரர் இரண்டு பணிகளுக்கு மேல் பங்கேற்க கூடாது. மூன்றாம் பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கும்பட்சத்தில் ஒப்பந்ததாரரின் முன் அனுபவம், பணித்திறன், நிதித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் பணி வழங்குதல் குறித்து முடிவு செய்யப்படும்.**

**21. ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள பணிகளுக்கு சம்மந்தப்பட்ட கோட்டத்தில் தகுந்த வகுப்பில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மட்டும் பங்கேற்க வேண்டும்.**

<u>இணைப்பு:</u> வேலைகளின் விவர அட்டவணை.

12/1/21

மேலாண்மை இயக்குநர்

12.01.2021
உ.செ.பொ

12/01/2021
உ.செ.பொ

12/01
பொ.மே
(9973)

பெறுநர்.

தாட்கோ ஒப்பந்ததாரர்கள் (பட்டியல்படி.)
(தொடர்புடைய கோட்டங்களின் மூலமாக)

நகல்:

1. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
2. தலைவர், தாட்கோ, சென்னை அவூர்களுக்கு தகவலுக்காக.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9 அவர்களுக்கு தகவலுக்காக.
4. ஆணையர்,,ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை – 5 அவர்களுக்கு
5. தகவலுக்காக.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
6. இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக.
7. பொது மேலாளர் (நிர்வாகம்) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
8. பொதுமேலாளர் (வளர்ச்சி) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
9. நிதிஆலோசகர் (ம) தலைமை கணக்கு அலுவலர், தாட்கோ அவர்களுக்கு தகவலுக்காக.
10. அனைத்துக் கோட்ட செயற்பொறியாளர்கள்.
11. அறிவிப்புப் பலகைக்கு

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
தேனாம்பேட்டை, சென்னை – 18.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 06/ 2020–2021 நாள்:12.01.2021

விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை – 19 பணிகள்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் கீழ்காணும் விவரப்படி பணியின் எதிரில் குறிப்பிடப்பட்ட நாளில் மாலை 3.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் தாட்கோ தலைமை அலுவலகத்திலுள்ள ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் முற்பகல் 11.00 மணியளவில் நேரில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் (அல்லது) அவர்களது முகவர்களின் முன்னிலையில் திறக்கப்படும். அரசாணை எண் 81/ ஆதி(ம)பகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் மற்றும் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டடப் பணியில் அனுபவமுள்ள முதல் அழைப்பாக இருந்தால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்ததாரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். இரண்டாம் மற்றும் அதற்குமேற்பட்ட அழைப்புகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்களுடன் ஏனைய ஒப்பந்ததாரர்களும் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் நடப்பாண்டு 2020 – 2021 நிலையில் ஒப்பந்தப் பதிவு பெறாத ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முடியாது. ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள பணிகளுக்கு சம்மந்தப்பட்ட கோட்டத்தில் தகுந்த வகுப்பில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மட்டும் பங்கேற்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் உரிய சான்றிதழ்களுடன் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான தொகையினைச்செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

"Tender form can be downloaded at free of cost from www.tenders.tn.gov.in"

| வ. எ ண் | வேலைகளின் விவரம் | | பணி விவரம் | வேலை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்பு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) |
|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | | |
| ஆதிதிராவிடர் நல விடுதிகள் கட்டுமானப் பணி (இரண்டாம் அழைப்பு) – 01 | | | | | | | |
| 1 | தூத்துக்குடி | ஆறுமுகநேரி | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி கட்டுமானப் பணி (50 மாணவியர்கள்) | 9 மாதங்கள் | 77000 | முதல் வகுப்பு | 15000 + 2700 |
| ஆதிதிராவிடர் நல விடுதிகள் கட்டுமானப் பணி (மூன்றாம் அழைப்பு) – 01 | | | | | | | |
| 2 | சிவகங்கை | கொம்புக்கார னேந்தல் | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி (50 மாணவர்கள்) | 9 மாதங்கள் | 63000 | முதல் வகுப்பு | 15000+2700 |

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
தேனாம்பேட்டை, சென்னை – 18.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 06/ 2020–2021 நாள்:12.01.2021

விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை – 19 பணிகள்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் கீழ்காணும் விவரப்படி பணியின் எதிரில் குறிப்பிடப்பட்ட நாளில் மாலை 3.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் தாட்கோ தலைமை அலுவலகத்திலுள்ள ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் முற்பகல் 11.00 மணியளவில் நேரில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் (அல்லது) அவர்களது முகவர்களின் முன்னிலையில் திறக்கப்படும். அரசாணை எண் 81/ ஆதி(ம)பகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் மற்றும் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டடப் பணியில் அனுபவமுள்ள முதல் அழைப்பாக இருந்தால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்ததாரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். இரண்டாம் மற்றும் அதற்குமேற்பட்ட அழைப்புகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்ததாரர்களுடன் ஏனைய ஒப்பந்ததாரர்களும் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் நடப்பாண்டு 2020 – 2021 நிலையில் ஒப்பந்தப் பதிவு பெறாத ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முடியாது. ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள பணிகளுக்கு சம்மந்தப்பட்ட கோட்டத்தில் தகுந்த வகுப்பில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மட்டும் பங்கேற்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் உரிய சான்றிதழ்களுடன் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான தொகையினைச்செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

"Tender form can be downloaded at free of cost from www.tenders.tn.gov.in"

| வ. எ ண் | வேலைகளின் விவரம் | | பணி விவரம் | வேலை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்பு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) |
|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | | |
| ஆதிதிராவிடர் நல விடுதிகள் கட்டுமானப் பணி (இரண்டாம் அழைப்பு) – 01 | | | | | | | |
| 1 | தூத்துக்குடி | ஆறுமுகநேரி | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி கட்டுமானப் பணி (50 மாணவியர்கள்) | 9 மாதங்கள் | 77000 | முதல் வகுப்பு | 15000 + 2700 |
| ஆதிதிராவிடர் நல விடுதிகள் கட்டுமானப் பணி (மூன்றாம் அழைப்பு) – 01 | | | | | | | |
| 2 | சிவகங்கை | கொம்புக்கார னேந்தல் | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி (50 மாணவர்கள்) | 9 மாதங்கள் | 63000 | முதல் வகுப்பு | 15000+2700 |

| வ. எண் | வேலைகளின் விவரம் | | பணி விவரம் | வேலை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்பு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ( சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) |
|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | | |
| ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணி (நபார்டு – XXV) (இரண்டாம் அழைப்பு) – 16 | | | | | | | |
| 3 | இராமநாதபுரம் | பாம்புவிழுந்தான் | ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கட்டடம் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 3 மாதங்கள் | 27000 | இரண்டாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| 4 | இராணிப்பேட்டை | எலத்தூர் | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு ஆறு வகுப்பறை, கழிவறை கட்டடம், சுற்றுச்சுவர் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 6 மாதங்கள் | 57500 | முதல் வகுப்பு | 15000+2700 |
| 5 | கடலூர் | ம.கொலக்குடி | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டுமானப் பணி. | 3 மாதங்கள் | 24500 | மூன்றாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| 6 | கடலூர் | T.புதூர் | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை மற்றும் கழிவறை கட்டடம் கட்டுமானப் பணி | 3 மாதங்கள் | 28500 | இரண்டாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| 7 | கடலூர் | கீழ்புளியம்பட்டு | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை மற்றும் கழிவறை கட்டடம் கட்டுமானப் பணி | 3 மாதங்கள் | 28500 | இரண்டாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| 8 | கடலூர் | பெருங்களூர் | ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கட்டடம் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 3 மாதங்கள் | 26000 | இரண்டாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| 9 | கடலூர் | A.A.மங்கலம் | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டுமானப் பணி | 3 மாதங்கள் | 24500 | மூன்றாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| 10 | கடலூர் | தச்சூர் | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டுமானப் பணி | 3 மாதங்கள் | 24500 | மூன்றாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |

| வ. எ ண் | வேலைகளின் விவரம் | | பணி விவரம் | வேலை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்பு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ( சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) |
|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | | |
| 11 | கடலூர் | சிறுமுலை | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டுமானப் பணி | 3 மாதங்கள் | 24500 | மூன்றாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| 12 | கடலூர் | மணக்காடு | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை மற்றும் கழிவறை கட்டடம் கட்டுமானப் பணி | 3 மாதங்கள் | 28000 | இரண்டாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| 13 | கடலூர் | மேலவன்னியூர் | ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்கு பத்துவகுப்பறை, கழிவறை கட்டடம் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 9 மாதங்கள் | 83000 | முதல் வகுப்பு | 15000+2700 |
| 14 | கடலூர் | சேமக்கோட்டை | ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்கு பத்து வகுப்பறை, இரண்டு கழிவறை கட்டடம் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 9 மாதங்கள் | 85000 | முதல் வகுப்பு | 15000+2700 |
| 15 | கடலூர் | சேப்பாக்கம் | ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு பத்து வகுப்பறை, ஆய்வுக்கூடம், இரண்டு கழிவறை கட்டடம் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 9 மாதங்கள் | 110000 | முதல் வகுப்பு, | 15000+2700 |
| 16 | கடலூர் | சிறுமங்கலம் | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை, அறிவியல் அய்வுக்கூடம் மற்றும் கழிவறை கட்டடம் கட்டுமானப் பணி | 5 மாதங்கள் | 45500 | முதல் வகுப்பு | 15000+2700 |
| 17 | கடலூர் | செல்லாங்குப்பம் | ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளிக்கு நான்கு வகுப்பறை கட்டடம் கட்டுமானப் பணி | 4 மாதங்கள் | 38000 | இரண்டாம் வகுப்பு அதற்கு மேலும் | 15000+2700 |

| வ. எண் | வேலைகளின் விவரம் | | பணி விவரம் | வேலை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்பு தொகை ரூபாய் | ஒப்பந்ததாரர் பதிவு விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ( சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) |
|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | | |
| 18 | கடலூர் | குறிஞ்சிக்குடி | ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டுமானப் பணி | 3 மாதங்கள் | 24500 | மூன்றாம் வகுப்பு அதற்கு மேலும் | 9000+1620 |
| **ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும்பணி (இரண்டாம் அழைப்பு) – 01** | | | | | | | |
| 19 | திருவண்ணாமலை | புளியம்பட்டி | ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளிக்கு அறிவியல் ஆய்வகம் மற்றும் கழிவறை கட்டடம் கட்டுமானப் பணி | 9 மாதங்கள் | 70500 | முதல் வகுப்பு | 15000+2700 |

முன்வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய விவரம்

| | | |
|---|---|---|
| **வ. எண்: 4 மற்றும் 19** | **செயற்பொறியாளர், தாட்கோ, வேலூர்** | **2** |
| **வ. எண்:5 முதல் 18 வரை** | **செயற்பொறியாளர், தாட்கோ, விழுப்புரம்** | **14** |
| **வ. எண்: 2 மற்றும் 3** | **செயற்பொறியாளர், தாட்கோ, மதுரை** | **2** |
| **வ. எண்:1** | **செயற்பொறியாளர், தாட்கோ, திருநெல்வேலி** | **1** |
| | மொத்தம் | **19** |

ஒப்பந்தப்புள்ளிபடிவம் கிடைக்குமிடங்கள்: சம்மந்தப்பட்ட செயுற்பொறியாளர், கோட்ட அலுவலகம்

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளிபடிவத்தின் விற்பனைக் காலம் : **(இணையதளம் மற்றும் சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகம்)** | **18.01.2021 முதல் 02.02.2021 வரை** | மாலை 5.45 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: **(சம்மந்தப்பட்ட கோட்ட அலுவலகம்)** | **03.02.2021** | **மாலை 3.00 மணி வரை** |
| ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழுவினரால் திறக்கப்படும் நாள் **(தாட்கோ, தலைமை அலுவலகம்)** | **04.02.2021** | **முற்பகல் 11.00 மணியளவு** |

பொது மேலாளர் (தொ.நு.)